# இந்தியா-பாலஸ்தீன வெளியுறவு அலுவலக ஆலோசனை கூட்டத்தின் முதல் சுற்று

**மே 04, 2015**

இந்தியா, பாலஸ்தீனத்திற்கும் இடையிலான வெளியுறவு அலுவலக ஆலோசனை கூட்டத்தின் முதல் சுற்று மே 4, 2015 அன்று ரமல்லா, பாலஸ்தீனத்தில் நடத்தப்பட்டது. பாலஸ்தீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரவையில் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவிற்கான அமைச்சரின் உதவியாளர் மற்றும் தூதர் மா◌ஃஜென் ஷாமியா , பாலஸ்தீனிய பிரதிநிதிக்குழுவினை தலைமை தாங்கினார். தூதர் சந்தீப் குமார், இணைச் செயலாளர் (மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்கா), வெளிவிவகார இந்திய அமைச்சகம், இந்திய அணியினை  தலைமையேற்று நடத்தினார்.

இருதரப்பு உறவின் முழு வரம்பும் மீளாய்வு செய்யபட்டத்தோடு சவால்கள் அடையாளம் காணப்பட்டது மற்றும் உறவுகளை முன்னோக்கி செலுத்த  வழிமுறைகள் வகுக்கப்பட்டது. அவர்கள் பாலஸ்தீனிற்கு இந்தியாவின் தொடர்ந்த ஆதரவு உட்பட முக்கிய பிராந்திய மற்றும் பலதரப்பு பிரச்சினைகள் குறித்து விவாதித்தத்தோடு, மத்திய கிழக்கில் சமாதான நடைமுறைகளில் சமீபத்திய திருப்பங்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்திகள், மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிராக போராட ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் பற்றியும் விவாதித்தனர்.இது சம்பந்தமாக, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் பெறுவதற்கு இந்தியாவின் முயற்சிகளின் விழைவுகளுக்கு பாலஸ்தீன பக்கம் தனது ஆதரவினை கோடிட்டது.

**புது தில்லி**

**04 மே 2015**